


# கன்பூசியசும் வேதாத்திரி மகரிசியும்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

**www.banukumar.in**

# கன்பூசியசும் வேதாத்திரி மகரிசியும்

அறநெறி வழியே உலக சமுதாயத்தில் தனி மனிதனாகவும் பொது மனிதனாகவும் வாழ்வது எப்படி எனச் சிந்தித்தவர் கன்பூசியஸ்.

இதனை வாழ்க்கை நெறியாக மாற்றித் தந்தவர் வேதாத்திரி.

சீன நாட்டில் பிறந்தவர் கன்பூசியஸ் கி.மு. 551 லிருந்து கி.மு.479 வரை வாழ்ந்தவர்.

வேதாத்திரி மகரிசி இந்தியாவில் தமிழகத்தின் கூடுவாஞ்சேரி கிராமத்தில் அவதரித்தவர். கி.பி.1911 லிருந்து 2006 ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவர்.

மகான்கள் எல்லாம் அவதரிக்கும் போது காணப்படும் அதிசியங்கள் அற்புதங்கள் அறிகுறிகளெல்லாம் கன்பூசியஸ் பிறந்தபோதும் வேதாத்திரி பிறந்த போதும் காணப்பட்டன.

கன்பூசியசும் வேதாத்திரி மகரிசியும் வெவ்வெறு நாடுகளில் வெவ்வேறு காலகட்டங்களில் வாழ்ந்தாலும் அவர்கள் உணர்த்திய அடிப்படையான உண்மைகள் ஒற்றுமையாகவே உள்ளன.

கன்பூசியசும் வேதாத்திரி மகரிசி சொல்லிய அடிப்படையான அறநெறிகள் எக்காலத்திற்கும எல்லா நாட்டினருக்கும எல்லா மக்களுக்கும் பொருந்துவனவாக அமைந்துள்ளன.

**கன்பூசியஸ்** இளமைப் பருவத்திலேயே அவரது தந்தை இறந்தார். ஆகவே கன்பூசியசும் அவரது அன்னையும் வறுமையில் வாழ்ந்தனர். வேதாத்திரி மகரிசி இளமைப் பருவத்தில் தறியில் நெசவு செய்து வறுமையில் வாழ்ந்தவர்.

இளைஞராக இருந்த போது **கன்பூசியஸ்** சிறிய அரசாங்க அதிகாரியாகப் பணிபுரிந்தார். வேதாத்திரி மகரிசி நெசவுத் தொழிலை செய்துவந்தவர்.

**கன்பூசியஸ்**  உபதேசம் வெறும் ஞான மார்க்கம் அல்ல. நடைமுறை வாழ்வில் சாதாரண மனிதனும் பின்பற்றக் கூடிய கர்ம மார்க்கந்தான். வேதாத்திரி மகரிசியும் இதைத்தான் செய்தார்.

இவரைப் பெரிய மகான் என்று பயபக்தியுடன் மக்கள் பன்னெடுங்காலமாகப் போற்றி வந்தாலும் மக்களை வியப்பில் ஆழ்த்தும் அற்புதச் செயல்கள் எதுவும் இவர் நிகழ்த்தவில்லை.பாமரமக்களின்  தத்துவஞானியாக  வேதாத்திரியை மக்கள்  பார்த்தனர்.




சீன மக்களின் அடிப்படை கருத்துகளைத் தொகுத்து ஒரு கோட்பாடாக வகுத்த முதல் மனிதர் பெரும் சீனத் தத்துவ அறிஞரான **கன்பூசியஸ்** ஆவார்.

இந்திய தத்துவத்தின் சாரத்தையும் உலகம் முழுவதும் உள்ள சான்றோர்கள் மகான்கள் சித்தர்கள் ஆழ்வார்கள் போன்ற அனைவரது கருத்துக்களையும் தொகுத்து மனவளக் கலை பயிற்சியாக மானுடத்திற்கு தந்தவர் வேதாத்திரி மகரிசி.

**கன்பூசியஸ்** கோட்பாடு தனி மனிதனின் அறவொழுக்கத்தையும், அறநெறியின் அடிப்படையில் மக்களை ஆண்டு பணிபுரியும் அரசாங்கத்தைப பற்றிய கருத்தையும் தழுவியது.

இரண்டாயிரம் ஆண்டுகளாக சீன மக்களின் வாழ்க்கையும், பண்பாடும் இதில் ஊறித் திளைத்திருந்தன. இதன் செல்வாக்கு உலக மக்கள் தொகையின் ஒரு பகுதி முழுவதும் பரவியிருந்தது.

தனிமனித அமைதி வாயிலாக உலக அமைதியை கொண்டுவர உலக சமுதாய சேவா சங்கம் கண்டவர் வேதாத்திரி மகரிசி.

கன்பூசியஸ் சீன நாட்டின் மாபெரும் ஞானி மட்டுமல்ல. வேதாத்திரி இந்திய நாட்டு ஞானி மட்டுமல்ல. இருவரும் உலகம் முழுவதற்குமே பொதுவான ஒரு தத்துவ ஞானிகள்.

"Forget the past and loose your two eyes" அதாவது "பழமையை மறந்து உனது இரண்டு கண்களையும் இழந்து விடாதே" என்று ரஷ்யப் பழமொழி சொல்கிறது.

ஆம், எவ்வளவு பெரிய உண்மை!. நாம் என்றும் முற்காலத்தையும், கன்பூசியஸ் மற்றும் வேதாத்திரி மகரிசி போன்ற சான்றோர் பெருமக்களின் மூதுரைகளையும் மறந்து குருடராகிவிடக் கூடாது.

## அறநெறியே வாழ்க்கை நெறி

கன்பூசியஸ் ஒரு மதத்தை நிறுவியராகப் போற்றப்படுகின்றார். ஆனால் அது முற்றிலும் உண்மையன்று. அவர் கடவுளைப் பற்றி மிக அரிதாகவே குறிப்பிட்டார்.

மறு உலக வாழ்வு பற்றி வாதிக்க மறுத்தார். எல்லா வகையான மெய்விளக்க ஊகக் கோட்பாடுகளையும் தவிர்த்தார்.

அடிப்படையில் அவர் ஓர் உலகியல் தத்துவ அறிஞர். தனிமனித, அரசியல் அறநெறியிலும் ஒழுக்கத்திலும் அக்கறை காட்டினார்.

கன்புசியஸ் சீன மக்களைக் கவர்ந்ததற்குப் பல காரணங்கள் உள்ளன.

முதலாவது அவருடைய வாய்மையும் நேர்மையும் தான். இரண்டாவது, அவர் மிதவாதியாகவும், நடைமுறைவாதியாகவும் இருந்தார். மக்கள் தம்மால் சாதிக்க முடியாதவற்றைச் செய்யுமாறு அவர் சொல்லவில்லை.

அவர்கள் ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டுமென்று அவர் கூறியபோது அவர்கள் புனிதர்களாக இருக்க வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கவில்லை.

இதிலும் பிறவற்றிலும் அவர் சீன மக்களின் நடைமுறை மனப்பாங்கையே பிரதிபலித்தார்.




அவருடைய கொள்கைகள் சீனாவில் பெரும் வெற்றி பெற்றதற்கு இதுதான் ஒருவேளை காரணமாக இருக்கக்கூடும்.

கன்பூசியஸ் சீன மக்களத் தம் அடிப்படை நம்பிக்கைகளை விட்டு விடுமாறு கேட்கவில்லை. அதற்கு மாறாக அவர் அவர்களுடைய மரபான அடிப்படை இலட்சியங்களையே தெளிவாகவும் உறுதியாகவும் திரும்பத் திரும்ப எடுத்துக் கூறினார்.

ஒரு வேளை உலக வரலாற்றில் வேறு எந்தத் தத்துவ அறிஞரும் கன்பூசியஸைப் போல் தம் நாட்டவரின் அடிப்படைக் கருத்துக்களுடன் அவ்வளவு நெருங்கி இருந்ததில்லை எனலாம்.

வேதாத்திரி மகரிசி சொன்னது பாடியது எழுதியது பேசியது பயிற்சி தந்தது அனைத்தும் வேதாத்திரியமாச்சு.

வேதாத்திரியம் ஒரு படைப்பிலக்கியமாகவோ- பக்தி இலக்கியமாகவோ -கருத்தை திணிக்கும் கசாய இலக்கியமாகவோ இல்லாமல்- ஒரு பட்டறிவு இலக்கியமாக இருக்கிறது.

வேதாத்திரியம்- ஒரு தனிமனிதனின் குரல் அல்ல. ஓர் உயர்ந்த நாகரிகத்தின் -ஒட்டுமொத்த தெளிவின் திரள்.

வேதாத்திரியம்- ஒரு படைப்பு முயற்சி அல்ல. பரிணாம வளர்ச்சி. மிக உயர்ந்த மீமிசையே -பூமிக்கு குடையாக முடியும். மிக உயர்ந்த உன்னதமே -உலகுக்கு கொடையாக முடியும்.

வேதாத்திரியத்தை -நாம் எதற்காக இன்றும் கொண்டாடுகிறோம். காரணம் -வேதாத்திரியம் இன்றும் தேவைப்படுகிறது.

தலைகுனியச் செய்யும்- தலைப்புச் செய்திகள். தினந்தோறும் வானிலை அறிக்கை போல வாசிக்கப்படுகிற வக்கிரங்கள். சிறைவாசலில் நின்று சிரித்து கையசைக்கும் -சில்லரை மற்றும் தேசிய கயவர்கள்.



குற்றங்களை விடவும் -கொடுமையாய் வலிக்கிறது. குற்ற உணர்வு -முற்றிலும் அற்றுப்போன அவலநிலை. சுற்றும் உலகம் சுருங்கிவிட்டது.

ஆனால் -வீடும் வீதியும் விலகிச் செல்கிறது. பலவகையிலும் குழம்பிக் கிடக்கிறது -வாழ்க்கை.

இருந்தாலும் குழைத்துப் போட- ஒரு மருந்து கையில் இருக்கிறது. இப்போதும் -இது நாட்டு மருந்து.

இந்த நாட்டு மருந்து எத்தனை ஆண்டுகாலம் ஆன பின்னாலும் -காலாவதி ஆகாத கைமருந்து.

இது மருந்தாகித்- தப்பா மரம் இல்லை. மானிடம் நிலைக்க -இந்த மண்ணில் என்றோ -முளைத்து இன்னும் தழைக்கும் அறம்.

உலகப் பொதுமறை வேதாத்திரியம் -ஏன் உலக பொதுமறை என்று சொல்கிறார்கள்.

தமிழில் -மறைப்பதற்கு எதுவுமில்லை. பொது மறை என்றாலும் கூட -எதிர்மறை தான்.

உண்மையில் பொதுமறை என்பதே -பொருத்தமற்றது. பொதுவான எதுவும் மறையாக, அதாவது மறைவாக இருக்கமுடியாது.

மறை என்ற சொல்லின் -பொருளும் சொற்பொருள் ஆக்கமும் மறைதல், மறைத்தல், ஒளிதல், ஒளித்தல், கமுக்கம், ரகசியம் என்ற அடிப்படைகளில் உருவாகி நிலை பெற்றது.

வெளிப்படையான, சமயச்சார்பற்ற- வேதாத்திரியத்தை பொதுமறை என்பதற்கு பதிலாக -உலகப்பொதுமறை என்று அழைப்பதே முறையாக இருக்கும்.

எனவே -வேதாத்திரியத்தை உலகப்பொதுமுறை என அழைப்பதே பொருத்தம்.

திசைகாட்டும் கருவி -திசைகளின் தேர்வு தெளிவாய் இருந்தால் வழிகள் பிறக்கும்; வாசல்கள் திறக்கும். வழிகாட்டிகள் உடன் வருபவர்கள் - அவர்கள் யோசிக்க விடுவதில்லை.

ஆனால்- திசைகாட்டும் கருவி தீர்க்கமானது. தெற்கு -வடக்கை தெரிவிக்கும். தேர்ந்தெடுக்கவேண்டியது -நாம் தான். திசை என்பது திக்கு.

வேதாத்திரியம் காட்டும் திசை -தெளிவானது. தீர்க்கமானது.அறத்தின் திசையாகவும்- வேதாத்திரியம் உள்ளது.

அறம் நோக்கமாகவும், பயன்பாடாகவும், வழிமுறையாகவும் இருக்கிறது. அறநோக்கம், அறவழி, அறப்பயன். அதுவே அறத்தை பொருளை, இன்பத்தை வழி நடத்துகிறது.

- பிறர்க்கோ-தனக்கோ-தற்காலத்திலோ-பிற்காலத்திலே அறிவிற்கோ-உடல் உணர்ச்சிக்கோ துன்பம் எழாத அளவோடும்- முறையோடும்- வாழக்கையைத் துய்க்கின்ற ஒழுக்கமும், முறையோடும் வாழக்கையைத் துய்க்கின்ற ஒழுக்கமும்- பிறர்க்கு ஒத்துதவி வாழ்கின்ற ஈகையயும்- தனது உழைப்பைக் கொண்டே தனது தேவைகளைக் பூர்த்தி செய்து கொள்கின்ற கடமையும் -இணைந்த தொகுப்புக் கருத்து அறம் ஆகும்.

ஏரி, குளம், கிணறு, ஆறு எல்லாம் நிரம்பி வழிய. மாரி அளவாய் பொழிக. மக்கள் வளமாய் வாழ்க, நீர்பொருளாதாரத்தை- உலகிற்கே முதலில் அறிமுகப்படுத்தியது வேதாத்திரியம் தான்.

வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் -வேதாத்திரியம் தெளிவுபடுத்துகிறது.

மகரிசியின் அறம், சமயம் சாராத அறம். இடம், காலம், வலிமை சார்ந்த நடைமுறை அறம். மனித வளத்தில் -முதலீடு செய்யும் முதல் அறநூல்.

வேதாத்திரியம் காட்டும்- அடிப்படைத் திசை- அறம். அந்த அடிப்படைக்கு அடிப்படையாய் -அடையாளம் பெறுவது மனச்சான்று.

அச்சம் சார்ந்த அறம் -அறமல்ல. பயன், புகழ் நோக்கும் அறம் உண்மையில் அறம் அல்ல. மனநலம் காக்க மருந்தொன்று உண்டு என்றால்- அது தினம் ஒரு வேதாத்திரியம் படித்து உணர்வது தான்.

## வேதாத்திரியத்தில் கன்பூசியஸ்..

மனிதன் மகிழ்ச்சியோடும் நெறியோடும் வாழ்வது எப்படி என்பதை கன்பூசியஸைப் போல் அழகாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறியவர் வேறுயாருமே இல்லை.

மனித இனத்திற்கு உபயோகரமான முறையில் இவரை விட வேறுயாருமே போதிக்கவில்லை.



இவர் ”சீனாவின் முடி சூடா மன்னர்” என்று சிந்தனையாளர் வால்டேரே – எவரையும் நையாண்டி செய்யும் வால்டேரே – உணர்ச்சியுடன் எழுதியிருக்கிறார்.

வேதாத்திரியும் இவரைப் புகழ்ந்திருக்கிறார். இதுவே இவரது சிறப்பிற்கு போதும்.

திருவள்ளுவரைப் போல் வேதாத்திரி மகரிசிப் போல் கன்பூசியஸ் ஒரு அறநெறியாளர்.

அதோடு இராஜ தந்திரியாக அனுபவம் பெற்றவர்.

குருகுல மகான். கல்வி கற்பிக்கும் போதானசிரியர். பழம் நூல்களை தொகுக்கும் பதிப்பாசிரியர்.

சீடர்களோடு நடமாடும் ஒரு பல்கலைக் கழகம். கவிஞர். இசைப்பாடகர்.

சங்கீதமேதை. அரசியல்வாதி. இயற்கைவாதி. இலட்சியவாதி. காரியவாதி. தத்துவஞானி.வாழ்க்கையோட்டத்தில் நாடோடி. இத்தனை சிறப்பியல்புகளும் ஒருங்கே வாய்ந்தவர்.

இவ்வியல்புகளால் பெற்ற அனுபவங்களைக் கொண்டு ஒரு புதிய கொள்கையை –மனித சமுதாயம் பற்றிய ஒரு புதிய லட்சியத்தை – நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்.

அந்த லட்சியங்கள் தான் என்ன?

ஒரே உலகம். ஒரே மனித சமுதாயம். ஒரே பொது ஒழுக்கம். உலகம் முழுவதற்கும் ஒரே ஒழுங்கு. ஒரே பொதுநெறி.

இத்தகைய உலகப் பொதுநல சமுதாய அமைப்பின் கீழ் தனிமனிதன் பொது மகனாக வாழவும், --
தன்னலமற்று பிற நலப்பற்றை மேற்கொண்டு சகோதர பாசத்தோடு பழகவும் , --
அன்பு வழியில் அறநெறியைப் பின்பற்றி இயற்கையோடு இயைந்து இன்பம் பெறவும், --
மனிதத் தன்மையைப் பண்படுத்தி வளர்த்துப் பூரணத்துவம் அடையவும் வேண்டும்..

இவ்வாறு 2500 ஆண்டுகளுக்கு முன் கன்பூசியஸ் சிந்தித்து பழமைப் பண்புகளை அஸ்திவாரமாக அமைத்து, அதன் மீது அறநெறிகள் வகுத்து, ஒரு கொள்கையை எழுப்பி  - உலகின் முன் நிறுத்தினார்.

அதை இன்று கன்பூசியஸம் எனப் போற்றி உலகம் சிந்தித்து வருகிறது.

கன்பூசியஸின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்று. இயேசு கிறிஸ்துவின் பொன்னான விதியின் திரிபு.

”பிறர் உனக்கு எதைச் செய்ய வேண்டா மென்று வரும்புகிறாயோ. அதை பிறருக்குச் செய்யாதே”

வேதாத்திரி மகரிசி இக் கருத்தினை வேறு கோணத்தில் இரண்டொழுக்கப் பண்பாடாக மானுடத்திற்குத் தந்துள்ளார்கள்.

1. நான் என் வாழ்நாளில் யாருடைய உடலுக்கும் உயிருக்கும் துன்பம் தரமாட்டேன்.
2. துன்பப்படும் உயிர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்..

## அறநெறி என்றால் என்ன?

அறநெறி என்றால் ஒழுக்கம் கடமை ஈகை தான். இம்முறையை கடைபிடித்து வாழும் வாழ்க்கை அறநெறி வாழ்க்கையாகும்.

கன்பூசியஸின் அடிப்படை நோக்கு பழமைப் பற்றுடையது. அவர் கடந்த காலமே பொற்காலமென்று நம்பினார்.

அரசரும் மக்களும் பழைய அறநெறித் தரங்களையே பின்பற்ற வேண்டுமென்று வலியுறுத்தினார்.

ஆயினும் உண்மையில்., அறநெறி முன்மாதிரியினால் ஆள வேண்டுமெனும் கன்பூசியசின் இலட்சியம், முற்கால நடைமுறையாக இருந்ததில்லை.

ஆகவே கன்பூசியஸ் புதியது புனைந்த சீர்திருத்தவாதியாகவே இருந்தார்

- ”தன் சக மனிதர்களை நேசிப்பதுதான் மேன்மையான மனிதத் தன்மை அவர்களை அறிவதுதான் அறிவு!”
- அமைதியான குணம், திடமான மனம், எளிமை, இயல்பு, நிதானம், நாவடக்கம், இவை மேன்மையான மனிதனின் தன்மைகள்.
- பணிவுடமை, பரந்த மனப்பான்மை, நேர்மை, சிரத்தை, கருணை இந்த ஐந்து இயல்புகளையும் இவ்வுலகில் பயில முடியாதவர்களை மேன்மையான மனிதரெனக் கருதலாம்.
- சிறந்த கல்வியின் நோக்கத்தை முன்று கூறுகளாக வகைப்படுத்தலாம். முதலாவது. மனிதன் தன் ஆன்ம இயல்பை பழுதுபடாத வண்ணம் பாதுகாப்பது. இரண்டாவது. மக்களுக்கு திருந்திய புதியதொரு வாழ்க்கை

முறையை வகுத்துக் கொடுப்பது. மூன்றாவது, பரிபூரண நிலை என்பது என்னவெனச் சரிவர உணர்ந்த பிறகு தான் ஒருவனுடைய வாழ்வில் இலட்சியம் என்பது உருவாகும்.

- அனைவரிடமும் அன்பு காட்டுவதுதான் உபகாரம் எனப்படும். அனைவரிடமும் அன்பு செலுத்துங்கள். நல்லவர்களின் நட்பை நாடுங்கள்.
- தன்வீட்டில் தன் குடும்பத்து அங்கத்தினர்களடன் அன்பு நிலையில் வாழ்பவன் தான் நாட்டு மக்களுக்கு அமைதியைப் பற்றிக் கூறுத் தகுதியுடையவன் ஆகிறான்.
- கடமை-மனித இனம் முழுமையும் கடைப் பிடிக்க வேண்டிய நேர்மையான பாதையாகும்.
- மக்களின் நேர்மையான ஒழுக்கத்தைப் பற்றி கவனிப்பது அரசினுடைய முக்கிய கடமை ஆகும்.

**கன்பூசியஸ் வேதாத்திரி காலம் மாறுபட்டாலும் கருத்துகள் ஒன்றேயாகும்.**

## கன்பூசியஸ் வாழ்க்கை வரலாறு ( கி.மு.551-கி.மு.479)

இவருடைய மூதாதையர்களில் ஒருவர் சுங் அரச பரம்பரையைச் சார்ந்தவன் என்று அவனைச் சொல்வதுண்டு.

கன்பூசியஸின் தந்தை சூ-லியாங்-கே அப்பட்டினத்தின் அதிகாரியாக இருந்தவர். நெஞ்சுரம் வாய்ந்த மாவீரர்.

அவருக்குத் திருமணமாகி நிறையப் பெண் குழந்தைகள் பிறந்தன. ஆனால் அவருக்கு நீண்ட காலமாக ஆண் மகவு இல்லை.

சந்ததியில்லாம் குறைபட்டுக் கொண்டிருந்த அவரது எழுபதாவது வயதில் பதினெழு வயது நிரம்பப் பெறாத ஒரு பருவ மங்கையை மணந்தார்.
அவர்களுக்குப் பிறந்த ஆண் குழந்தையே கன்பூசியஸ்.

இவரது தந்தை யென் குடும்பத்து குமரியொருத்தியிடம் காதல் கொண்டிருந்தார் என்றும் அக்காதலர்களுக்குப் பிறந்த குழந்தைதான் கன்பூசியஸ் என்றும் மற்றொரு வரலாறு உண்டு.

ஆனால் பல ஆண்டுகளுக்குப் பிறகு அவர் பதவி துறந்தார்.
அதன்பின்னர் பதினாறு ஆண்டுகளாக மக்களுக்குப் போதித்து வந்த காலத்தில் அவரது கோட்பாட்டைக் கேட்டு ஏராளமானவர்கள் அவரைப் பின்பற்றினார்கள்.

ஞானி என்றால் உலகியலைத் துறந்துவிட்டு ஒதுங்கி நிற்கும் பரமாத்திக யோகி அல்ல.

அவரது ஐம்பதாவது வயதில் லூ அரசாங்கத்தில் அவருக்கு ஓர் உயர் பதவி வழங்கபட்டது.

ஆனால் நான்குஆண்டுகளுக்குப் பிறகு அரசவையிலிருந்து எதிரிகள் அவரை பதவியிலிருந்து விலக்கி அரசைவிட்டே வெளியேற்றி விட்டன.

அடுத்த பதிமூன்று ஆண்டுகளாக அவர் அங்குமிங்குமாக அலைந்து திரிந்து போதித்து வந்தார்.
கடைசியாக அவர் தாயகம் திரும்பி தம் வாழ்வின் இறுதி ஐந்து ஆண்களை அங்கு கழித்தார். கி.மு. 479 ல் அவர் மறைந்தார்.

## கன்பூசியஸ் வேதாத்திரி ஒப்பாய்வு

### சோதனைகளின்றி துன்பங்கள் தோல்வியுறுமா?

உராயவு இல்லாமல் ரத்தினங்ளை பளபளப்பாக்க முடியாது.
சோதனைகளின்றி மனிதரை சரியானவராக்க முடியாது என்பது **கன்பூசியஸ் மொழி.**

**துன்பத்திற்கு என்ன காரணம்? விடையாக வருகிறார் மகரிசி**

**"பொறிபுலன்கள் உடற்கருவி அமைப்பைக்கொண்டு**
**புதிதுபுதிதாய்க கருவி அமைத்துக் கொண்டு**
**அறிவோடு சுகாதாரம் பொருளாதாரம்**
**அரசியல் விஞ்ஞானம் ஐந்தறிந்தும்**
**நெறியுடனே ஒவ்வொன்றும் மற்றவைக்கு**
**நர்முரணாய் இயங்காத முறை காணாது**
**சிறிது பெரிதாய்ச் சிக்கல் மேலும் மேலும்**

சேர்த்துக் கொண்டே மனிதன் கவலை பெற்றான்." (உலக சமாதானம் பா.7)

வந்த துன்பம் ஏற்றுச் சகித்து அவற்றைப் போக்க வழிகண்டு முறையோடு ஆற்றி இன்பம் காத்து எந்தத் துன்பம் வரினும் எதிர்நோக்கி நிற்பாயேல் இன்பமே மிகுதிபடும். துன்பங்கள் தோல்வியுறும் என்பது வேதாத்திரியார் **வாக்காகும்.**

## வாய்மையே வெல்லும்?

**"உயர்ந்த மனிதன் என்றும் வாய்மையைப் பற்றியே எண்ணுவான். ஆனால் ஒரு சாதாரண மனிதன் வசதியைப் பற்றியே எண்ணுவான் என்றும்......**

**"ஓர் உயர்ந்த மனிதன் தன்னுடைய வாய்மையை சிறிய உணவு இடைவேளைக் காலத்திற்குக்கூட கைவிடமாட்டான். அவசரக் காலத்திலும் அபாய காலத்திலும் அதை அவன் கைவிடமாட்டான்." என்றும்...**

**"ஒருவனுக்கு போதுமான அறிவிருந்த பொழுதிலும் அந்த அறிவினைத் தக்கவைத்துக் கொள்ள, வாய்மை இல்லாமல் போனல், அவன் கற்றவை எல்லாம் இழந்து நிற்பான்" என்றும்** **கன்பூசியஸ்** **சொல்லுவார்.**

**"தூய்மையாய் விளைவுதரும் சொற்கள் அனைத்துமே வாய்மையாம் அவை வாழ்வின் வளம் காத்து சிறப்பளிக்கும்." என்பார் வேதாத்திரி மகரிசி.**

## "தேவையும் தேவையுணர்வும்"

"தேவை" என்பது பலவீனமானவரையும் பலசாலியாக்கும் **என்பது** **கன்பூசியஸ் அறிவுரை.**

துன்பத்திலிருந்து விடுபட ஆன்மா ஒரு செயலையோ, பொருளையோ, சூழ்நிலையையோ நாடுகின்றது. இந்த நாட்டமே தேவையுணர்வாகும் என்பார் **வேதாத்திரி.**

## வஞ்சமா? பழிவாங்கும் செயலா?

**"பழிவாங்கும் பாதையில் பயணிக்குமுன் இரண்டு சவக் குழிகளைத் தோண்டிக்கொள்" என்பார்** **கன்பூசியஸ்.**

**"வஞ்சனையால் வருவதுதான் பழிவாங்கும் செயல். பொறுமைக்கு எல்லை வரையறை செய்தல் அது வஞ்சம். சினத்தைமுடிக்க வலுவையும், வாய்ப்பையும் நாடி நிற்கும் ஆசை தான் வஞ்சம்." என்பார் வேதாத்திரி மகரிசி.**

## இந்த வஞ்சத்தை எப்படி போக்குவது?

"சினம் ஒழிந்துவிட்டால் வஞ்சம் ஒழிந்துவிடும். நலம் தரும் முறையிலான ஆராய்ச்சி மிக்க தண்டனையோ, மன்னிப்போ அளித்துவிட்டால் வஞ்சம் என்னும் மனநோய் முறிந்துவிடும். நான் திருந்தி என்ன பயன்? அவர் திருத்த வேண்டாமா? என்று நினைக்காமல் முதலில் நம்மைத் திருத்ததிக் கொள்வோம். அடுத்தவர் தாமே திருத்தி விடுவார்" என்பார் வேதாத்திரி மகரிசி.

போதனையும் சாதனையும் கலந்ததுதான் வேதாத்திரியம்.
போதனையும் சாதனையும் கலந்ததுதான் மனவளக்கலை.

## நித்தியக் கடன் எவை?

கடமை – மனித இனம் முழுமையும் கடைப் பிடிக்க வேண்டிய நேர்மையான பாதையாகும் **கன்பூசியஸ்.**

மக்களின் நேர்மையான ஒழுக்கத்தைப் பற்றி கவனிப்பது அரசினுடைய முக்கிய கடமையாகும்.

உனக்கும் நல்லதாய் ஊருக்கும் நல்லதாய் நினைப்பதும் நினைப்பதும் செய்வதும் நித்தியக் கடன் என்கிறார் **வேதாத்திரி**.

## அன்பின் செயல்கள் எது?

அனைவரிடமும் அன்பு காட்டுவதுதான் உபகாரம். அன்பு செலுத்துங்கள். நல்லவர்களின் நட்பை நாடுங்கள்**என்கிறார் கன்பூசியஸ்.**

அனைத்துயிரும் ஒன்றென்று அறிந்த அடிப்படையில் ஆற்றும் கடமை எல்லாம் அன்பின் செயலாகும்.

அறநெறி வாழ்வு மக்களிடம் எவ்வாறு இயல்பாக மலரும் என்பதை வேதாத்திரி மகரிசி கூறுகிறார்.

"தனக்கோ பிறருக்கோ தற்காலத்திலோ பிற்காலத்திலோ உடலுக்கோ உயிர் உணர்ச்சிக்கோ துன்பம் விளைவிக்காத எண்ணம்தான் ஒழுக்கம் என்பதாகும்" என்பது வேதாத்திரியம்..

## சினம் தவிர்த்தல் எப்படி?. (வெகுளாமை)

கோபம் வரும்பொழுத பின் விளைவுகளை யோசி என்கிறார் கன்பூசியஸ்.

சினத்தை எப்படி தவிர்ப்பது என்பதை பயிற்சியாகவும் பாடமாகவும் தந்தவர் வேதாத்திரி மகரிசி.

சினத்தை எப்படி தவிர்ப்பது? விடை தருகிறார் மகரிசி.

பொறுமையாக இருக்க சங்கல்பம் மேற்கொள்ளல் , சுயசீர்திருத்தம், சமநோக்கு, வாழ்த்துதல்,பொறுமை, விட்டுக் கொடுத்தல், தியாகம், சகிப்புத் தன்மை கைக்கொள்ளல், பிறர் அறியாமையை உணர்த்தாமல்,

பிறர் குறைகளை எண்ணாமல் நிறைகளை மட்டும் எண்ணல், மன்னித்தல், யார்யார் மீது சினம் ஏற்படுகிறது எனப் பட்டியலிட்டு -

மிக நெருக்கமானவர்களிடம் ஆரம்பித்து அவர்களை நினைந்து நினைந்து இனிமேல் சினம் கொள்ள மாட்டேன் என சங்கல்பித்து

வாழ்க வளமுடன் என ஒவ்வொருவருக்கும் ஒரு வாரம் வீதம் வாழத்தி, சினம் தவிர்த்து வாழ பயிற்சி செய்துவர, நமக்கு அமைதி ஏற்படும். அவர்களுக்கும் நமக்கும் அமைதி அலையினால் நல்லிணக்கம் ஏறபடும்.

## உண்மையான அறிவு எது?

”நீ பெற்ற அறிவினை மற்றவரிடம் பகிர்ந்து கொள்வதும், உனக்குத் தெரியாததை வெளிப்படையாக ஒப்புக்கொள்வதும் உண்மையான அறிவு என்று கருதப்படும்” என்பது கன்பூசியஸ்

”அறிவறிந்தேர் அகத்தை மெய்ப்பொருாய் காண்பர்
அறிவை அறியும் ஆற்றல் அனைவரிடமும் உண்டு.” என்பது வேதாத்திரியம்.

## வறுமையற்ற வாழ்க்கை

”நன்றாக நிர்வகிக்கப்படுகின்ற நாட்டிலே வறுமைக்கு நாண வேண்டும். மோசமாக நிர்வகிக்கப்படுகின்ற நாட்டிலே செல்வம் இருப்பின் நாண வேண்டும்” என்பது கன்பூசியஸ்“

வறுமை தீர்ந்ததா? எனக் கேட்கிறார் வேதாத்திரி மகரிசி.

”வறுமையைப் பொறுத்திட
வல்லவரோ எல்லோரும்?
பொறுமைதான் கொண்டாலும்
பொறுக்குமோ உடல் குடும்பம்?
சிறுமை பிறர்பால் பேசிச்
சீறும் ஆட்சி நடிகர்களே!
பெறுகின்றீர் கை தட்டல்!
பிற்பட்டோர்க் கென் செய்தீர்,” (ஞாக.பா.140)

வறுமையற்ற வாழ்வு வேண்டும் என்கிறார் வேதாத்திரி மகரிசி. அதற்கு ஒருலகுப் பேரரசு வேண்டும் என்கிறார் உலக சமாதானத்தில்.

"வறுமை எனும் கொடுந் துன்பம் வாராது,
வளவாழ்வு பெறுதற்கு ஓருலகப் பேரரசு வரவேண்டும்." (ஞாக.பா.145)

## நெறி போற்றும் அரசா? சிறந்த ஆட்சியா?

"நெறி போற்றும் அரசன், விண்ணில் நிலைகொண்டு பிற நட்சத்திரங்களை நோக்க அமையும் துருவ நட்சத்திரம் போன்றவன்." என்று அறநெறி அரசை விழைகிறார் கன்பூசியஸ்

"இலாமென்ற ஒன்றேதான்தனியார் செய்யும்
எத் தொழிலி லும்உள்ள குறிக்கோள் ஆகும்.
இலாபத்திற் கேமக்கள் உடல்உள் ளத்தை
எந்தஅளவும் கெடுக்கும் கொடுமை யாகும்.
இலாபநட்டம் பொதுமக்கள் அனுப விக்கும்
இன்பதுன்பம் எனக்கணிக்கும் ஆட்சி காண்போம்.
இலாபத்தில நட்டத்தில் மனிதர் எல்லாம்
இணைந்தஒரு கூட்டுறவே சிறந்த ஆட்சி" (ஞாக.பா.123)

அறநெறியுடன் மனிதர் எல்லாம் இணைந்த ஒரு கூட்டுறவே சிறந்த ஆட்சி என்கிறார் வேதாத்திரி மகரிசி.

- இன்றுள்ள விஞ்ஞான காலத்திற்கு ஏற்ப மக்களிடம் அறிவு வளர்ந்துள்ளது. தெய்மென்ற நிலையைத் தெளிவு பட விளக்கினால், அந்த தெய்வ நிலையுணர்வினால, மாபெரும் ஆற்றல் எல்லா உயிர்களிடத்தும் ஒவ்வொரு விண்துகளைச் சுற்றிலும் நிறைந்து நின்று இயங்கிக் கொண்டிருக்கும் காட்சியை மக்கள் அக உணர்வாக பெறுவார்கள். அந்த உள்ளொளியில்தான் ஒவ்வொருவருக்கும் துன்பம் அளிக்கக் கூடாது, துன்பம் நீக்க என்னால் இயன்ற உதவி செய்ய வேண்டும் என்ற அறநெறி வாழ்வு மக்களிடம் இயல்பாகும்..

மேலும் வாழ்வுக்குத் தேவையான அறநெறிகள் என்ன என்பதையும் வேதாத்திரி மகரிசி வகுத்து தந்துள்ளார்கள்.

1. வாழ்வின் நோக்கம், தேவைகள், விருப்பங்கள் இவற்றை மதிப்பீட்டுக் கொள்ள வேண்டும். இவை ஒன்றுக்கொன்று முரண்படாமல் அமைத்துக் கொள்ள வேண்டும்.
2. தனக்கு அமைந்துள்ள சூழ்நிலைகளையும் வாய்ப்புக்களையும் கணித்துக் கொள்ள வேண்டும்.
3. இயற்கையின் ஒழுங்கமைப்பும், அதன் ஆற்றலின் விளைவான காரண காரிய விளைவு விதியைப் பற்றி உணர்ந்து கொண்டு மதித்துப் போற்றி நடக்க வேண்டும்.
4. வாழவேண்டிய முறைகளையும், ஆற்றவேண்டிய செயல்களையும் வரிசைப்படுத்திக் கொள்ள வேண்டும்.
5. இத்தகைய வாழ்வுக்குத் தன்னைத் தகுதியாக்கிக் கொள்வதற்கு உடல் வலிமையையும், திறனையும், அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.
6. விடாமுயற்சியோடும், எண்ணம், சொல் , செயல் இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.
7. அவ்வப்போது வாழக்கையில் ஏற்படும் தவறுகளைத் தற்சோதனை, செயல்திருத்தம் என்ற இரண்டு வழிகளிலும் திருத்தித் தன்னைத் தூய்மையாக்கிக் கொண்டே இருத்தல் வேண்டும்.

இத்தகைய அறநெறிகளை வாழ்விலே பின்பற்றி செயல்பட்டால், மனித வாழ்வில் உள்ள் சிக்கல்கள் அனைத்தையும் படிப்படியாகக் குறைந்து நிறைவும் அமைதியும் உடைய வாழ்க்கை வாழலாம் என்று வேதாத்திரியார் வழி காட்டுகின்றார்.

இந்த நோக்கம் நிறைவேண்டுமானால் முதலில் சிந்தனையாற்றலை மக்களிடம் தூண்டிவிட வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

இதுவே தினசரி வாழ்விலும் கல்வி முறையிலும் மனித குலத்திற்கு வழிகாட்டியாய் அமைய வேண்டும்.

இந்த அடிப்படையில் சிந்தித்துத் தேவையற்ற செயல்களை, சடங்கு முறைகளை ஒதுக்கிவிட்டு, வாழ்க்கைத் திட்டங்களை முறையாக வகுத்துக் கொண்டு வாழவேண்டிய அவசியத்தை சிந்தித்து உணரும்

போது மனித சமுதாயம் உயர்வு பெறும் என்று வேதாத்திரியார் கூறுகின்றார்.

**கன்பூசியஸ்** , வேதாத்திரி மகரிசி போன்ற உலக சிந்தனையாளர்கள் கூறும் இத்தகைய அறநெறிகளை வாழ்விலே பின்பற்றி செயல்பட்டால், நமது வாழ்வு இனிமையாகவும், அமைதியாகவும், சிறப்பாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

## துணைநின்ற நூல்கள்.


1. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிசி.
2. உலக சமாதாம், வேதாத்திரி மகரிசி
3. அன்பொளி மாத இதழ்கள், வேதாத்திரி மகரிசி
4. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000 அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
5. மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து, வேதாத்திரி மகரிசி.
6. **The Analects of Confucius** by Confucius and Sam Vaseghi.
7. **The Analects (Penguin Classics) by Confucius and Annping Chin**
8. **Confucius: The Golden Rule (Hardcover)** by Russell Freedman
9. **Confucius: Great Teacher of China (Hardcover)** by Demi
10. **Complete Works of Confucius (Kindle Edition)** by Confucius
11. சீனஞானி கன்பூசியஸ் சிந்தனை விளக்கக் கதைகள் வேணுசீனிவாசன்
12. **தத்துவஞானி கன்பூசியஸ் அருளிய வாழ்க்கை வெளிச்சங்கள் அருள்நிதி ஆதவன்**
13. கன்பூசியஸ்-திருவள்ளுவர் கருத்தொற்றுமை, அமரேசன் பட்டுசாமி.